அல்ல. நம் மாநிலத்திற்குத் தனிச் சிறப்புண்டு. அதை நீங்கள் செய்கிறீர்கள். ஆகவே, உங்களுக்கு வாழ்த்துகளைத் தெரிவிப்பதோடு, 75,000 எதிர்கால இளைஞர்களைக் காப்பாற்றுகின்ற வகையிலே, 75,000 இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு கொடுப்பேன்; 2026–ல் அப்படிப்பட்ட பணியைச் செய்வேன், மக்களைக் காப்பாற்றுவேன் என்று சொல்கிற வார்த்தை என்பது மிகவும் முக்கியம் என்பதைச் சொல்வேன்.

முற்பகல் 11–20

இன்றைக்கு படித்தவர்கள் அதிகமாக உள்ள கன்னியாகுமரி மாவட்டத்தில், ஒரு வீட்டில் பார்த்தோமென்றால் இரண்டு engineers; ஒரு கிராமத்தில் பார்த்தோமென்றால், 100 engineers, 100 doctors இருப்பார்கள். பெற்றோர்கள் சொல்வார்கள், நம்பிக்கையோடு பிள்ளைகளைப் படிக்க வைக்கின்றோம். வேலைவாய்ப்பில்லை; வெளி நாடுகளுக்குச் செல்கின்றனர்; வெளி மாநிலங்களுக்குச் செல்கின்றனர். நீங்கள் 75,000 பேருக்கு வேலைவாய்ப்புக் கொடுப்பீர்களென்று வரக்கூடிய செய்தி, தமிழகத்திலுள்ள எல்லா கிராம மக்களின் மத்தியிலும் உங்களுக்கு மதிப்பையும், மரியாதையையும் ஏற்படுத்தித் தரும் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை இந்த நேரத்தில் சொல்லி, உங்களுடைய அற்புதமான செயல்பாடுகளை மீண்டும் காங்கிரஸ் கட்சி சார்பிலே வாழ்த்தி, வாய்ப்புக்கு நன்றி சொல்லி அமைகிறேன். நன்றி.

## 7. அறிக்கை அளித்தல்

### மதிப்பீட்டுக் குழு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** குழுவின் அறிக்கைகள் அளித்தல். மதிப்பீட்டுக் குழுவின் அறிக்கைகள் அளித்தல். மாண்புமிகு உறுப்பினர் திரு. க. அன்பழகன், மதிப்பீட்டுக் குழுவின் தலைவர் அவர்கள்.

**திரு. க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் 2023–2024 ஆம் ஆண்டிற்கான மதிப்பீட்டுக் குழுவின் நாற்பதாவது முதல் நாற்பத்து எட்டாவது வரையிலான 9 அறிக்கைகளைக் குழுவின் சார்பாக இப்பேரவைக்கு அளிக்கிறேன்.